A consumer is the important visitor on our premises.
He is not dependent on us. We are dependent on him.
-Mahatma Gandhi


# TAMIL NADU ELECTRICITY OMBUDSMAN

4th Floor, SIDCO Corporate Office Building,Thiru-vi-ka Industrial Estate,
Guindy, Chennai – 600 032.
Phone : ++91-044-2953 5806, 044-2953 5816 Fax : ++91-044-2953 5893
Email :tneochennai@gmail.com Web site : www.tnerc.gov.in


**முன்னிலை: திரு. ந. கண்ணன், மின்குறைதீர்ப்பாளர்**

**<u>மேல்முறையீட்டு மனு எண் 40 / 2023</u>**

திரு. பி. கணபதிவேல்,
எண். 45-10B, பாரதிநகர், 1வது தெரு,
கோவில்பட்டி - 628 501,
தூத்துக்குடி மாவட்டம்.

………மேல்முறையீட்டாளர்
(Rep. by திரு R. கந்தகுமார்)

எதிர்

1. செயற்பொறியாளர் / விநியோகம்/கோவில்பட்டி,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
TNEB வளாகம், இளையரசநெண்டல் ரோடு,
கோவில்பட்டி - 628 501.

2. உதவி செயற்பொறியாளர் / விநியோகம்/ஊரகம்/கோவில்பட்டி,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
TNEB வளாகம், இளையரசநெண்டல் ரோடு,
கோவில்பட்டி - 628 501.

3. உதவி மின்பொறியாளர் / விநியோகம்/நாலாட்டின்புதூர்,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
195, 2, பிள்ளையார் கோவில் தெரு,
நாலாட்டின்புதூர் - 628 716.

. . . எதிர்மனுதாரர்கள்
(திரு S. காளிமுத்து, செயற்பொறியாளர் / விநியோகம்/கோவில்பட்டி
திரு G. மெஹவேல், உதவி செயற்பொறியாளர் / விநியோகம்/ஊரகம்/கோவில்பட்டி
திரு K. விஷ்னுஷங்கர், உதவி மின்பொறியாளர் / விநியோகம்/நாலாட்டின்புதூர்)

**<u>மனு பெறப்பட்ட நாள்: 29-05-2023</u>**

**<u>கேட்புரை நாள்: 09-08-2023</u>**

**<u>ஆணை நாள்: 14-08-2023</u>**

29.05.2023 அன்று பெறப்பட்ட திரு. பி. கணபதிவேல், எண். 45–10B, பாரதிநகர், 1வது தெரு, கோவில்பட்டி – 628 501, தூத்துக்குடி மாவட்டம் அவர்களின் மனு மேல்முறையீட்டு மனு எண் 40/2023 ஆக பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட மனுவின் மீது மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை 09.08.2023 அன்று நடைபெற்றது. மேல்முறையீட்டாளரின் மனுவிலுள்ள வாதங்கள், எதிர்மனுதாரரின் பதிலுரையிலுள்ள வாதங்கள் மற்றும் இருதரப்பினராலும் கேட்புரை நாளில் எடுத்துரைக்கப்பட்ட வாதங்கள் ஆகிய அனைத்தையும் ஆராய்ந்து மின்குறைதீர்ப்பாளரால் கீழ்கண்ட ஆணை வழங்கப்படுகிறது.

## ஆணை

1. **மேல்முறையீட்டாளரின் கோரிக்கை:**

தன்னுடைய விவசாய நிலத்தில் அடிக்கடி ஏற்படும் மின்தடையை நீக்க கோரியும், மின்தடையை காரணம் காட்டி வெட்டப்பட்ட மரங்களுக்கான நிவாரணம் வேண்டியும் மற்றும் மின் கருவிகள் எரிந்து போனதற்கான நிவாரணம் வேண்டியும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.0 **வழக்கின் சுருக்கம்:**

2.1 தன்னுடைய விவசாய நிலத்தில் அடிக்கடி ஏற்படும் மின்தடையை நீக்க கோரியும், மின்தடையை காரணம் காட்டி வெட்டப்பட்ட மரங்களுக்கான நிவாரணம் வேண்டியும் மற்றும் மின் கருவிகள் எரிந்து போனதற்கான நிவாரணம் வேண்டியும் மேல்முறையீட்டாளர் விண்ணப்பித்துள்ளார்.

2.2 மேல்முறையீட்டாளர் ஏற்கனவே உள்ள மின் பாதைக்கு கீழே தென்னை மரங்கள் வளர்த்து வந்ததால் தென்னை மட்டைகள் உரசி மின்பாதை அறுந்து மேல்முறையீட்டாளருக்கு ஏற்பட்ட மின்தடை சரிசெய்யவும் மின்பாதையில் உரசிக்கொண்டிருந்த தென்னை மட்டைகளின் கிளைகள் மட்டும் அவரது ஒப்புதலின் பேரில் தோட்டத்தில் பணியாற்றும் பணியாள் முன்னிலையில் பாதுகாப்பு கருதியும் எதிர்வரும் காலத்தில் தடையில்லா மின்சாரம் வழங்கும் நோக்கிலும், வெட்டப்பட்டு அறுந்த மின்கம்பி சரிசெய்யப்பட்டு மின்விநியோகம் வழங்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

2.3 எனவே, வெட்டப்பட்ட மரங்களுக்கு நிவாரணம் வேண்டி மேல்முறையீட்டாளர் தூத்துக்குடி மின்பகிர்மான வட்டம், மின் நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றத்தை அணுகியுள்ளார்.

2.4 மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம், தூத்துக்குடி மின்பகிர்மான வட்டம் 30.01.2023 அன்று தன்னுடைய ஆணையை அளித்துள்ளது. மன்றம் அளித்த தீர்ப்பில் அதிருப்தியுற்றதால் இந்த மேல்முறையீட்டு மனுவினை மேல்முறையீட்டாளர் மின்குறைதீர்ப்பாளரிடத்தில் சமர்ப்பித்துள்ளார்.

**3.0 <u>மன்றத்தின் தீர்வு :</u>**

3.1 தூத்துக்குடி மின்பகிர்மான வட்டம், மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் தன்னுடைய தீர்வை 30.01.2023 நாளிட்ட ஆணையில் தெரிவித்துள்ளது. அந்த ஆணையின் சம்பந்தப்பட்ட பத்தி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"மன்றத்தின் தீர்வு:*

*மனுதாரரின் மனுவை இம்மன்றம் இன்று 19.01.2023-ல் கூடி மனுதாரர் தரப்பு கோரிக்கைகளையும், வாரிய தரப்பு பதில்களையும் ஆய்வுசெய்ததில் மனுதாரரின் மின்னிணைப்பு எண் 304-019-350 ல் மின் தடை புகார் பெறப்பட்டவுடன் உடனுக்குடன் மின் தடை சரிசெய்யப்பட்டுள்ளதாலும், அடிக்கடி மின் தடை ஏற்பட்டதால் மின் பாதைக்கு இடையூராக இருந்த மரக்கிளைகள் மட்டும் வெட்டப்பட்டதாலும், மனுதாரரின் மீட்டர் பெட்டி cutout ல் இருந்து மோட்டாருடைய starter க்கு சென்ற பழுதடைந்த மின் வயரை மனுதாரர் மாற்றி 20.12.2022 அன்று மின்சாரம் வழங்கப்பட்டதை தொடர்ந்து மனுதாரரின் மின் இணைப்பில் எந்தவொரு மின் தடை புகாரும் பெறப்படவில்லை என்பதாலும், தொடர்ந்து சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருவதாலும் இந்த மனு மீது மேற்கொண்டு எந்தவித மேல் நடவடிக்கையும் தேவையில்லை என இம்மன்றம் உத்திரவிட்டு இந்த மனுவை முடித்து வைக்கிறது."*

**4.0 <u>மின்குறைதீர்ப்பாளரின் கேட்புரை</u>:**

4.1 மேல்முறையீட்டாளரும் எதிர்மனுதாரரும் தங்களது தரப்பு வாதங்களை எடுத்துரைப்பதற்கு வசதியாக 09.08.2023 அன்று காணொலி மூலம் கேட்புரை நடத்தப்பட்டது.

4.2 மேல்முறையீட்டாளர் சார்பாக திரு R. கந்தகுமார், வழக்கறிஞர் அவர்கள் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தன்னுடைய வாதத்தை எடுத்துரைத்தார்.

4.3 எதிர்மனுதாரர்கள் திரு S. காளிமுத்து, செயற்பொறியாளர் / விநியோகம்/ கோவில்பட்டி, திரு G. மெகவேல், உதவி செயற்பொறியாளர் / விநியோகம்/ஊரகம்/ கோவில்பட்டி மற்றும் திரு K. விஷ்னுஷங்கர், உதவி மின்பொறியாளர் / விநியோகம்/ நாலாட்டின்புதூர், தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம் ஆகியோர் கேட்புரை நாளில் கலந்து கொண்டு தங்களுடைய வாதத்தை எடுத்துரைத்தனர்.

4.4 மின்குறைதீர்ப்பாளரின் முன்பு சமர்ப்பிக்கப்படும் மனு மேல்முறையீட்டு மனு என்பதால் மின்குறைதீர்மன்றத்தில் மனுதாரரால் வைக்கப்பட்ட கோரிக்கைகள் சம்பந்தப்பட்ட வாதங்கள் மட்டுமே தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது. குறைதீர் மன்றத்தின் நடவடிக்கைகள், குறைதீர் மன்றத்தில் சமர்ப்பிக்கப்படாத புதிய நிவாரணங்கள் அல்லது பணியாளர் ஒழுங்கு நடவடிக்கை சம்பந்தப்பட்ட கோரிக்கைகள் முதலியன மின்நுகர்வோர் குறைதீர்க்கும் மன்றம் மற்றும் மின்குறைதீர்ப்பாளருக்கான ஒழுங்குமுறை விதிகளின்படி மின்குறைதீர்ப்பாளரின் தீர்விற்கு எடுத்துக் கொள்ளப்படவில்லை.

5.0 <u>மேல்முறையீட்டாளரின் வாதங்கள்</u>:

5.1 மேல்முறையீட்டாளர் 18.09.2022 ஞாயிறு இரவு 6.30 மணிக்குப் பிறகு தன்னுடைய தோட்டத்திற்குள் தான் அங்கு இல்லாத போது மின் துறையின் பணியாளர் திரு. மு. முனியசாமி (கம்பியாளர்) தன்னுடன் 2 பேரை அழைத்துக் கொண்டு சென்று 14 தென்னை மரங்களில் 54 கிளைகளை தென்னைகளின் குறுத்துப் பகுதிகளை ஒட்டி, தென்னம்பாளைகள் ஒட்டியும் கிளைகளின் அடிப்பகுதி வரை வெட்டிச் சேதாரம் ஏற்படுத்தியிருந்தது நிழற்படங்கள் மூலம் தான் அலுவலர்களுக்கு அனுப்பியதாகவும், அன்று இரவு தோட்டத்துக்கு, கோவில்பட்டியிலிருக்கும் தன்னால் செல்ல முடியாது எனவும், அப்போது மரக்கிளைகளை வெட்டித் தருகிறேன் என்று கைபேசியில் அலுவலர்களுக்கு தெரிவித்தும் அவர்கள் "சரி" என்று தன்னிடம் பேசிய பின்பும் இந்த நிகழ்வு நடந்திருப்பதை பார்க்கும் போது திட்டமிட்டே மரங்களுக்கு சேதாரம் உண்டாக்குவதன் மூலம் தன்னுடைய தொழிலை முடக்கிட திட்டமிட்டே செய்திருக்கிறார்கள் எனவும், இந்த நிகழ்வுக்குமுன் பலமுறை மின் கம்பியை தொட்டும் உரசியும் மின் தடை ஏற்பட்டதாக அலுவலர்கள் சொன்னபோதெல்லாம் (17.06.2021 & 26.07.2021 தேதிகளில் மின்தடை புகாரின் போது) மரத்தின் கிளைகளை எந்தவித

சேதாரமும் மரத்திற்கு ஏற்படாமல் வெட்டியுள்ளதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.2 மேலும் மின்கம்பத்தின் மின்கம்பிகளுக்குக் கீழ் மின்பாதைக்கு கீழே தென்னை மரங்கள் நடப்பட்டிருப்பதால் மின்தடை ஏற்படுகிறது என்கிற அலுவலர்களின் குற்றச்சாட்டு நியாயமனது என தான் ஒப்புக்கொள்வதாகவும், ஆனால் அந்த குற்றச்சாட்டுக்கு காரணமானவர்கள் அப்போதிருந்த (2017ம் ஆண்டில்) மின்அலுவலர்கள் தான் 20.10.2017 முகல் 28.10.2017 வரையுள்ள நாட்களில் தோட்டத்துக்குள்ளே மின்கம்பங்கள் நடப்பட்டன. தோட்டத்தின் கம்பி வேலியிலிருந்து 5 மின்கம்பங்கள் தூரத்திற்கு அப்பால் தென்னைமரத்தின் குழிகளுக்கு நெருக்கமாய் நடப்பட்டிருக்கின்றன எனவும், வேலியையொட்டி 2-3 அடி அருகில் மின்கம்பங்ள் நடப்படவேண்டும் என்று தான் அலுவலர்களை பலமுறை வேண்டியும் காதில் வாங்கிக்கொள்ளாமல் தென்னங்குழிகளையொட்டி மின்கம்பங்களை நட்டுவிட்டதாகவும், இது அப்போதே சரி செய்யப்படாதது அப்போதிருந்த நாலாட்டின்புத்தூர் மின்அலுவலக மின் உதவி பொறியாளர் திரு. ஆனந்தகுமார் மற்றும் அப்போதைய & இப்போதைய கோவில்பட்டி நகர ஊரக செயற்பொறியாளர் திருமதி சகர்பான் அவர்களையே சாரும் என்பது நிதர்சனமான உண்மையாகும் எனவும், மேலும் 18.09.2022 ஞாயிறு காலை 6.26 மணியளவில் தோட்டத்திற்கு வெளியேயுள்ள (முன்புறமாக) மின் கம்பத்தில் தான் மின்கம்பி அறுந்து கீழே விழுந்து கிடந்ததாகவும், தோட்டத்தின் உள்ளேயுள்ள மின் கம்பத்தில் அல்ல எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.3 18.09.2022 ஞாயிறு இரவு 6.30 மணிக்கு மேல் தென்னை மரங்களின் கிளைகள் வெட்டப்பட்ட பின்பு கூட மின்தடை நீக்கப்படாமல் 03.10.2022 திங்கள் மோட்டார் வைக்கும் அறையிலிருந்து ஆழ்துளைக்குழாய் கிணற்றுக்குள் செல்லும் வயர்கள் எரிந்து மின்தடை ஏற்பட்டுள்ளதாகவும், இதற்குக் காரணம் சீரான மின்சாரம் வழங்கப்படாதது தான் காரணம் என்று தான் அலுவலர்களுக்கு தெரிவித்திருந்தும் தக்க நடவடிக்கை எடுக்கவில்லை எனவும், 05.10.2022 அன்று ஆழ்துளைக் கிணற்றுக்குள் 10 அடி தூரத்தில் எரிந்திருந்த வயர்களை நீக்கி, புதிய வயர்கள் இணைத்து சரி செய்ததாகவும், ஆழ்துளை கிணற்றையும் மூடியதாகவும், இந்த இரண்டாவது மின்குறைதீர்க்கும்

மன்றத்தின் தலைவர் சரியான நடவடிக்கை எடுக்கவில்லை, நஷ்டத்திற்கு நிவாரணமும் செய்யவில்லை எனவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.4 25–10–2022, செவ்வாய் அன்று தோட்டத்தில் மின் மோட்டார் அறையில் 3 Phase– களிலும் மின்தடையிருப்பதை தோட்ட பணியாள் காலை 9.18 am மணியளவில் கைபேசியில் தன்னிடம் பேசிய போது சொன்னதாகவும், தான் அன்று சென்னையில் மகன் வீட்டில் என் மனையோடு இருந்ததாகவும், கம்பியாளர் திரு. மு. முனியசாமியிடம் "7–20" கனமான 4 வயர்கள் கொண்ட திரட்டு, கம்பத்தின் கீழுள்ள மின் அளவு காட்டும் பெட்டிக்கு அருகில் 1.5 அடி நீளத்தில் வயர்கள் எரிந்துள்ளதாக தெரிவித்துள்ளதாகவும், திரு. மு. முனியசாமி தோட்டத்திற்குள் வந்து மின் கம்பத்தின் மேலுள்ள 3 Fuse Carrier–களை எடுத்து தோட்டத்திற்குள்ளே வந்து மின்கம்பத்தின் மேலுள்ள 3 Fuse carrier–களை எடுத்து தோட்டத்தின் பணியாளரிடம் அன்றே கொடுத்துச் சென்றுவிட்டதாகவும், இப்போதும் மின்சார அழுத்தம், சீரற்ற மின் சப்ளையால் தான், வயர்கள் எரிந்துள்ளன என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.5 மன்றத்தின் தலைவர் அவர்களை 15–12–2022 வியாழன் காலை 9–20 மணியளவில் தொடர்பு கொண்டதாகவும், காரணம் கடந்த 25–10–2022 முதல் 15– 12–2022 வரை மரங்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியவில்லை. 14–11–2022 அன்று தலைவர் அவர்களுக்கு புகார் குறை தீர்க்கும் புகார் மனு, சமர்ப்பித்திருந்ததாகவும், மின் கம்பத்திலிருந்து மோட்டார் அறை வரை வயர்கள் உயர் மின் அழுத்தத்தால் எரிந்திருந்தது என்பது உண்மையாகும் எனவும், மின் அலுவலக அலுவலர்கள் பார்வையிடாமல் நானாக எதுவும் செய்ய கூடாது என்பதால், காத்திருந்ததாகவும், 52 நாட்களாக யாரும் பார்வையிடவில்லை எனவும், 15–12–2022ல் அவர்களோடு பேசும் போது மின் தடையா? என்றார்கள். ஆம் என்றேன், நான் 25–10–2022 அன்று மின் கம்பத்திலிருந்து மோட்டார் வரையுள்ள வயரை நானே மாற்றிக் கொள்கிறேன் என்று கூறவில்லை. மனுதாராகிய நான் புதிய வயர்கள் மாற்றிக்கொள்கிறேன் என்று பேசவே இல்லை. அவர்களது 31.01.2023 தேதிய நடவடிக்கை 149 இல் கூறப்பட்டிருப்பது உண்மைக்கு முரணானது, மனுதாராகிய தான் மாற்றிக்கொள்கிறேன் என்று கூறியதாக தலைவர் எழுதியிருப்பது உண்மையானது அல்ல என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.6 கோவில்பட்டி செயற்பொறியாளர் 15-12-2022 அன்று காலையில் தோட்டம் வந்து பார்வையிட்டதாக அறிந்ததாகவும், ஏனெனில் அன்று 11.00 மணியளவில் தான் தோட்டம் சென்றதாகவும், கம்பியாளர் திரு. மு. முனியசாமி, மேடம் வந்து பார்த்துவிட்டுச் சென்றார்கள் எனவும், மேற்படி வயர்கள் எரிந்தது உண்மையென்று அலுவலர்கள் அறிந்ததால் அதன் பின்பு தான் 16.12.2022 வெளியாட்கள் 2 பேர் மூலம் 3 நாட்கள் வேலை பார்த்து புதிய வயர்கள் மாற்றியும் எர்த் கம்பிகள் புதியது மாற்றியும் முழுமையாக முடித்ததாகவும், 20.12.2022 அன்று மின் தடை நீக்கப்பட்ட மின் கம்பத்தில் மாட்ட 3 Fuse carrier - களையும் கம்பியாளர் திரு.முனியசாமியிடம் கொடுத்ததாகவும், அப்போது அந்த 2 வெளியாட்களும் தன் தோட்டத்தில் இருந்தார்கள் எனவும், அதன் பின் மோட்டார் போடப்பட்டு சரிபார்க்கப்பட்டது எனவும், அதன் பிறகு தண்ணீர் பாய்ச்சப்பட்டதாகவும் மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

5.7 ஆகவே இந்த 3 மின் குறைபாடுகளுக்கும் நிவாரணமும், பொருளாதார நிவர்த்தியும் தருமாறு வேண்டு பணிவுடன் இந்த மனுவை சமர்ப்பிப்பதாக மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

**6.0 <u>எதிர்மனுதாரரின் வாதங்கள்</u>:**

6.1 திரு.கணபதிவேல், Retd DEO, அவர்களுக்கு சொந்தமான இடைசெவல் பகுதியில் உள்ள விவசாய நிலத்திற்கு தட்கல் திட்டத்தின் கீழ் ரூபாய் 2.50 லட்சம் அன்னார் செலுத்தியதன் அடிப்படையில் 30.11.2017 அன்று மின் இணைப்பு எண் 364-019-350 வழங்கப்பட்டதாகவும், மேற்படி நிலத்தில் மின்பாதை மின் நுகர்வோரின் நிலத்தின் ஓரத்தில் மின் வேலியை ஒட்டி, பக்கத்து நிலத்திற்கு போதிய பாதுகாப்பு இடைவெளி வழங்கி அமைக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.2 திரு.கணபதிவேல், Retd DEO அவர்களின் நிலத்தின் எல்லையில் வேலியை ஒட்டியே அமைக்கப்பட்டுள்ளதாகவும், அவரின் நிலத்தின் ஊடாக மின் பாதை கொண்டு செல்லப்படவில்லை எனவும், அன்னாரது நிலத்திற்கு மின் இணைப்பு வழங்கும் போது நிலம் காலியாக இருந்ததாகவும், மின் இணைப்பு பெற்று தண்ணீர் கிடைத்தவுடன் அன்னார் தென்னை மரங்களை மின்பாதைக்கு மிக அருகில் போதிய இடைவெளியின்றி நட்டு பராமரித்து வருகிறதாகவும், அம்மரங்கள் பெரிய மரங்களாக

வளர்ந்து, அம்மரங்களின் மட்டைகள் மின் பாதையில் உரசுவதால், மின் மாற்றியில் தொடர்ந்து Fuse போவதால் அன்னாரது விவசாய மின் இணைப்பிற்கு மின் தடைஏற்படுகிறதாகவும், அதனை உடனுக்குடன் சரிசெய்து மின் விநியோகம் செய்யப்பட்டு வந்ததாகவும், இச்சூழலில் 18.09.2022 அன்று அன்னாரது தோட்டத்தின் உட்புறம் மின் கம்பிகள் அறுந்து மின் தடை ஏற்பட்டதாலும் மின் விபத்தை தவிர்க்க வேண்டியும் மின் பாதையை சரி செய்து உடனடியாக மின் விநியோகத்தை வழங்கவேண்டும் என்ற நோக்கில் அன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை என்ற போதும் பணி மேற்கொள்ளப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.3 மின் பாதை சீரமைக்கப்படும் விபரம் திரு.கணபதிவேல் அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டதாகவும், ஆனால் அன்னார் தோட்டத்திற்கு வரவில்லை தோட்டத்தில் பணியாற்றும் பணியாளர் முன்னிலையில் மின் பாதைக்கு இடையூராக உள்ள தென்னை மர மட்டைகளின் ஒரு பகுதி (மின் பாதையில் உரசும் மட்டைகள்) துண்டிக்கப்பட்டு மின் கம்பியை சரி செய்து மின் விதியோகம் வழங்கப்பட்டது அதன் பின்னர் அன்னார் 21.09.2022 நாளிட்ட புகார் மனுவிற்கு உரிய விளக்கத்தை உதவி செயற்பொறியாளர் /விதியோகம்/ கோவில்பட்டி அலுவலக கடிதம் மூலம் அன்னாரது இல்ல முகவரிக்கு அனுப்பப்பட்டு அக் கடிதத்தை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை பெறப்பட்டதாகவும், திரு.கணபதிவேல், Retd DEO அவர்கள் நிலத்தின் மின் பாதையில் தென்னை மர மட்டைகள் உரசிக்கொண்டுள்ள புகைப்படம் இணைக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.4 புகாரில் மனுதாரர் தெரிவித்துள்ளபடி மரங்களுக்கு சேதம் ஏற்படுத்தவில்லை எனவும், அறுந்த மின் கம்பிகளை மீண்டும் மின்கம்பத்தில் கட்டுவதற்கு தடையாக இருந்த மட்டைகள் மட்டும் வெட்டப்பட்டு அறுந்த மின் கம்பிகளை Binding செய்து சரி செய்யப்பட்ட புகைப்படம் இணைக்கப்பட்டுள்ளதாகவும், திரு.கணபதிவேல் அவர்களிடம் பலமுறை இது தொடர்பாக விளக்கம் தெரிவித்த பின்பும் அன்னார் வாரிய தரப்பு விளக்கத்தை ஏற்றுக்கொள்ளாமல் உயர் அலுவலர்களுக்கு தொடர்ந்து புகார் அனுப்புவதையே வாடிக்கையாக கொண்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.5 18.9.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று மின் பாதைக்கு இடையூராக உள்ள தென்னை மர மட்டைகள் அகற்றப்பட்டபின் மின்தடை குறைபாடு நீங்கவில்லை என்றும் 03.10.2022 அன்று மோட்டார் வைக்கும் அறையிலிருந்து ஆழ்துளை கிணற்றுக்குள் செல்லும் வயர்கள் எரிந்து சேதமானதற்கு சீரான மின் விநியோகமின்மை என்பதே காரணம் என்று தவறாக தெரிவித்துள்ளது ஏற்புடையதல்ல எனவும், மின் நுகர்வோர் பராமரிப்பில் உள்ள மோட்டார் மற்றும் சாதனங்கள் அதற்குரிய மின் கட்டமைப்பை பராமரிப்பது மின் நுகர்வோரின் கடமையாகும் அதனை மேற்கொள்ளாமல் வாரியத்தின் மீது குற்றம் சாட்டியுள்ளதாகவும், அன்னாரது மின் இணைப்பு உள்ள பகுதியில் மின் அழுத்தம் சீராகவே உள்ளது என்பது ஆய்வின் போது கண்டறியப்படுகிறதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.6 இந்நிலையில் கடந்த 12/2022 அன்று மேற்பார்வை பொறியாளர், தூத்துக்குடி மின்பகிர்மான வட்டம் தூத்துக்குடி அவர்களிடம் தனது மின் இணைப்பில் மின்சாரம் தடைபட்டுள்ளது என அலைபேசியில் திரு.கணபதிவேல் Retd DEO, அவர்கள் புகார் தெரிவித்துள்ளதாகவும், அதனடிப்படையில் 15.12.2022 அன்று பிரிவு பொறியாளர் நாலாட்டின்புதூர் அவர்களால் மேற்படி மின் இணைப்பு ஆய்வு செய்யப்பட்டு ஆய்வில் cut out வரை மின்சாரம் வருவதை புகார்தாரரிடம் காண்பிக்கப்பட்டதாகவும், மேலும் மீட்டர் பெட்டி cut out லிருந்து மோட்டாருடைய starter க்கு செல்லும் வயர் எரிந்து கருகியுள்ளதையும் காண்பிக்கப்பட்டதாகவும், இந்த வயர் எரிந்துள்ளதை பார்க்கவில்லை மாற்றிவிட்டு சொல்கிறேன் என்று திரு.கணபதிவேல், Retd DEO, அவர்கள் தெரிவித்துள்ளதால் பாதுகாப்பு கருதி மின் கம்பத்தில் fuse carrier அகற்றப்பட்டு மின் நுகர்வோரிடமே ஒப்படைக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.7 மேற்படி மின் இணைப்பில் மீட்டர் பெட்டி cut out லிருந்து மோட்டாருடைய starter க்கு செல்லும் எரிந்திருந்த வயரை மின் நுகர்வோர் மாற்றிவிட்டு தகவல் தெரிவிக்கும்படி கம்பியாளர் மற்றும் இளமின் பொறியாளர் ஆகியோர் பல முறை தொலைபேசியில் திரு, கணபதிவேல், Retd DEO, அவர்களிடம் தெரிவித்துள்ளதாகவும், இந்நிலையில் 20.12.2022 அன்று அன்னாரிடமிரந்து தகவல் பெறப்பட்டவுடன் மின் இணைப்பை ஆய்வு செய்து

அன்றைய தினமே மின் இணைப்பு வழங்கப்பட்டுவிட்டதாகவும், மின்னழுத்தம் சீராக இருந்தது அவருக்கு காண்பிக்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.8 திரு.கணபதிவேல் அவர்கள் தனது தோட்டத்தில் மின் பாதைக்கு இடையூராக மரங்களை வளர்த்துள்ளதன் காரணமாக மின் பாதையில் தென்னை மட்டைகள் உரசி மின்தடை ஏற்படுவதை மறைத்து மின் வாரியம் தடையில்லா மின்சாரம் வழங்கவில்லை என்று புகார் தெரிவிப்பதுடன் மின் நுகர்வோர் பராமரிக்கவேண்டிய மின் கட்டமைப்பில் ஏற்படும் குறைபாடுகளுக்கு மின் வாரியமே பொறுப்பு என்று கூறியுள்ள கருத்து ஏற்படையதல்ல என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.9 தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழக விதிகளின்படி மின்பாதை மற்றும் மின் மீட்டர்களை ஆய்வு செய்ய மின் நுகர்வோர் அனுமதி பெறவேண்டிய அவசியம் இல்லை எனவும், மின் பாதையில் ஏற்படும் மின் தடைகளை சரி செய்ய மின் வாரியத்தில் பணியாற்றும் பணியாளர் மின் பாதையை ஆய்வு செய்வது மற்றும் மின் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வது வாடிக்கையான ஒன்று எனவும், எனவே திரு.கனபதிவேல். Retd DEO, அவர்கள் தனது புகாரில் தெரிவித்துள்ளபடி தனது முன் அனுமதியின்றி மின் பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டது என்று தெரிவித்துள்ளது ஏற்புடையதல்ல எனவும், பல முறை அவரை புகார் தொடர்பாக அழைத்தும் அவர் தனது தோட்டத்திற்கு வந்து அவரது குறைகளை நிவர்த்தி செய்ய ஒத்துழைக்கவில்லை எனவும், மேலும் மின் விநியோகம் என்பது 24 × 7 பணியாகும், மின்தடை ஏற்பட்டால் விடுமுறை நாட்களிலும் மின்தடையை சரி செய்ய மின் வாரிய பணியாளர்கள் பணியாற்றுவார்கள் எனவும், எனவே விடுமுறை நாளான 18.09.2022 (ஞாயிற்று கிழமை) அன்று பொதுமக்கள் நலன் கருதியே பணி மேற்கொள்ளப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.10 நிலம் காலியாக இருக்கும் போது வேலியை ஒட்டி அமைக்கப்பட்ட மின் பாதைக்கு கீழ் மின் இணைப்பு பெறப்பட்டு, அதன் பின்பு தென்னை மரங்களை நட்டு வளர்த்து வருவதாகவும், அம்மரங்களின் மட்டைகள் மின்பாதையில் உரசுவதால் அடிக்கடி மின் தடை ஏற்படுவதோடு மின் கம்பிகள் அறுந்து விழும் சூழல் ஏற்பட்டுள்ளதாகவும், மின் பாதைக்கு கீழ் எவ்வாறு தென்னை மரங்களை மின் நுகர்வோர் திரு.கணபதிவேல், Retd. DEO, அவர்கள் வைத்துள்ளார் என்பது இணைக்கப்பட்ட புகைப்படங்கள் மூலம்

தெளிவாகிறது எனவும், மின்பாதைக்கு இடையூராக இருந்து தென்னை மர மட்டைகளின் பகுதியை அகற்றியதற்கு வாரியம் இழப்பீடு வழங்க வேண்டும் என்று தனது மேல்முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ளது ஏற்புடையதல்ல, மாறாக அன்னாரது செயலால் வாரிய மின் கட்டமைப்பிற்கு சேதம் ஏற்படுகிறதாகவும், இன்றைய நிலையிலும் தென்னை மர மட்டைகள் மின் கம்பிகளுடன் உரசிக் கொண்டுள்ளதால் அடிக்கடி மின் தடை ஏற்படுகிறதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.11 திரு.கணபதிவேல் அவர்கள் மின்குறைதீர்ப்பாளர் அவர்களுக்கு அளித்த மனுவில் முதலாவது மின்குறையில் மின்வாரியத்தின் மின்பாதைக்கு கீழே தென்னை மரங்கள் நடப்பட்டிருப்பதால் மின்தடை ஏற்படுகிறது என்கிற அலுவலர்களின் குற்றச்சாட்டு நியாயமானதுதான் என ஒப்புக்கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளதாகவும், அன்னார் ஏற்கனவே உள்ள மின்பாதைக்கு கீழே தென்னை மரங்கள் வளர்த்து தென்னை மட்டைகள் உரசி 18.02.2022 அன்று மின்பாதை அறுந்து மின்தடை ஏற்பட்டதை The Electricity Act 2005 விதி (5) ன் படி மின்பாதையில் உரசிக்கொண்டிருந்த தென்னை மட்டைகளின் கிளைகள் மட்டும் அன்னாரின் ஒப்புதலின் பேரில் தோட்டத்தில் பணியாற்றும் பணியாளர் முன்னிலையில் பாதுகாப்பு கருதியும் தடையில்லா மின்சாரம் வழங்கும் நோக்கிலும் வெட்டப்பட்டு அறுந்த மின்கம்பிகளை சரிசெய்யப்பட்டு மின் விநியோகம் வழங்கப்பட்டதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.12 தற்போது தென்னை மட்டைகள் தாழ்வழுத்த மின்பாதையில் உரசிக்கொண்டு இருப்பதையும் மேற்கண்ட தென்னை மட்டைகளை திரு.கணபதிவேல், Retd DEO அவர்கள் வெட்டுவதற்கு அனுமதிக்காததால் அவருக்கு வரும் தாழ்வழுத்த மின்பாதையில் உள்ள மற்ற மின் நுகர்வோர்கள் சிரமப்படுகின்றனர் அன்னார் அவரது நிலத்தில் நுழைய அனுமதி மறுத்துக் கொண்டே உள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.13 மனுதாரருக்கு மின் இணைப்பு வழங்க அவருடைய நிலத்தில் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் (Tamil Nadu Electricity Distribution Code) வகுத்துள்ள மின் விதி 27 (7) மற்றும் (9) ன் படி உரிமையாய் நிலத்தின் ஓரத்தில் மின் கம்பம் நட்டு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.14 கடந்த 15.12.2022 அன்று மின்தடை ஏற்பட்டுள்ளதாக திரு.கணபதிவேல் அவர்களிடமிருந்து வந்த புகாரின் அடிப்படையில் பிரிவு பொறியாளர் ஆய்வு செய்து ஆய்வில் கட்அவுட் வரை சீராக மின்சாரம் வருவது அன்னாரின் முன் காண்பிக்கப்பட்டு மீட்டர் பெட்டி கட்அவுட்டிலிருந்து மோட்டாருடைய ஸ்டார்டருக்கு செல்லும் ஒயர் எரிந்துள்ளதையும் அதனை பராமரிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டதாகவும், அதன் பின்பு 16.12.2022 அன்று வேலையாள் வைத்து புதிய வயர்கள் மற்றும் எர்த் கம்பிகள் முழுமையாக மாற்றியதாக புகார் மனு தெரிவித்துள்ளதாகவும், திரு. கணதிவேல், அவர்களின் மின் இணைப்பிற்கு செல்லும் தாழ்வழுத்த மின்பாதையில் உள்ள பிற மின் நுகர்வோர்கள் எவருக்கும் உயர் மின்னழுத்தம் ஏற்படாத போது அன்னார் மட்டும் தனக்கு உயர் மின்னழுத்தத்தால் மின் வயர் எரிந்து இருந்தது என்று தெரிவித்து இருப்பது எற்றுக்கொள்ளத்தக்கதில்லை என எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.15 மேலும் மேற்கண்ட தாழ்வழுத்த மின்பாதையில் உள்ள பிற மின் நுகர்வோர்கள் திருகணபதிவேல் அவர்களின் மின் பாதையின் கீழ் வைத்துள்ள தென்னை மரத்தினால் அடிக்கடி மின்தடை ஏற்படுவதாகவும் அதனால் தங்களுக்கு பெரிய பாதிப்பு ஏற்படுவதாகவும் தெரிவித்துள்ளதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

6.16 திரு.கணபதினேல், Retd DEO, அவர்கள் தனது நிலத்தின் உள்ளே மின்னரிய பணியாளர் செல்ல அனுமதிக்காமல் உள்ளதால் மின்கம்பியில் உரசும் தென்னை மட்டைகள தற்போது அகற்ற முடியாமல் உள்ளதாகவும், தற்போது எடுக்கப்பட்ட போட்டோ இணைக்கப்பட்டுள்ளதாகவும், எனவே மின்குறைதீர்ப்பாளர் மன்றத்தில், மின் நுகர்வோர் திரு.கணபதிவேல், Retd DEO. அவர்கள் 2/3/2023 நாளிட்டு சமர்ப்பித்துள்ள மேல் முறையீட்டு மனுவை நிராகரிக்கும்படி எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

## 7.0 <u>மின் குறைதீர்ப்பாளரின் தீர்வு</u>:

7.1 இருதரப்பு வாதங்கள் மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவற்றை ஆராய்ந்து கீழ்க்கண்டவாறு தீர்வு செய்யப்படுகிறது.

7.2 மேல்முறையீட்டாளர் கீழ்க்கண்ட கோரிக்கைகளுக்கு நிவாரணம் வேண்டி விண்ணப்பித்துள்ளார்.

1) தன்னுடைய மின் இணைப்பு எண் 304-019-350-இல் அடிக்கடி மின் தடை ஏற்படுவதாகவும், மின்சாரம் தடையின்றிக் கிடைத்திட வேண்டியும்,

2) மின் தடையை காரணம் காட்டி 18.09.2022 அன்று தென்னைமரங்களில் வெட்டப்பட்ட 54 மட்டைகள் மற்றும் மின் இணைப்பு மோட்டார் பாதிப்பு உண்டானதற்கு நிவாரணம் வேண்டியும்,

3) மின் கருவிகள் எரிந்து போய் உண்டான பொருளாதார பாதிப்புக்கு நிவாரணம் வேண்டியும் விண்ணப்பித்துள்ளார்.

7.3 மேல்முறையீட்டாளர் தனது மின் இணைப்பு எண் 304-019-350-இல் கடந்த ஐந்து ஆண்டுகளாக அடிக்கடி மின்தடை ஏற்படுவதாகவும், அது தொடராமல் இருக்க தன்னுடைய மின் இணைப்புக்கு மின் தடங்கல்கள் சிலவற்றில் உடனடியாகவும், பலவற்றில் நீண்ட காலங்கள் கழிந்தும் மின்சாரம் வழங்கப்பட்டதாகவும் மேலும் தன்னுடைய மின் இணைப்புக்கு மட்டும் தான் மேண்டுமென்றே மின்தடை உரிமதாரர் ஏற்படுத்துவதாகவும் வாதிட்டார்.

7.4 எதிர்மனுதாரர் மேல்முறையீட்டாளர் நிலத்திற்கு மின் இணைப்பு வழங்கும் போது அவரின் நிலத்தின் ஊடாக மின் பாதை கொண்டு செல்லப்படவில்லை எனவும், அன்னாரது நிலத்திற்கு மின் இணைப்பு வழங்கும் போது நிலம் காலியாக இருந்ததாகவும், மின் இணைப்பு பெற்று தண்ணீர் கிடைத்தவுடன் அன்னார் தென்னை மரங்களை மின்பாதைக்கு மிக அருகில் போதிய இடைவெளியின்றி நட்டு பராமரித்து வருவதாகவும், அம்மரங்கள் பெரிய மரங்களாக வளர்ந்து, அம் மரங்களின் மட்டைகள் மின் பாதையில் உரசுவதால், மின் மாற்றியில் தொடர்ந்து Fuse போவதால் அன்னாரது விவசாய மின் இணைப்பிற்கு மின் தடைஏற்படுதாகவும் தெரிவித்துள்ளார்.

7.5 மேல்முறையீட்டாளருக்கு ஏற்படும் மின்தடையினை உடனுக்குடன் சரிசெய்து மின் விநியோகம் செய்யப்பட்டு வந்த நிலையில் 18.09.2022 அன்று அன்னாரது தோட்டத்தின் உட்புறம் மின் கம்பிகள் அறுந்து மின் தடை ஏற்பட்டதாலும் மின் விபத்தை தவிர்க்க வேண்டியும் மின் பாதையை சரி செய்து உடனடியாக மின் விநியோகத்தை வழங்கவேண்டும் என்ற நோக்கில் அன்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை என்ற போதும் பணி மேற்கொள்ளப்பட்டதாகவும், மின் பாதை சீரமைக்கப்படும் விபரம் திரு.கணபதிவேல்

அவர்களுக்கு தெரிவிக்கப்பட்டும் அன்னார் தோட்டத்திற்கு வரவில்லை எனவும், தோட்டத்தில் பணியாற்றும் பணியாளர் முன்னிலையில் மின் பாதைக்கு இடையூராக உள்ள தென்னை மர மட்டைகளின் ஒரு பகுதி (மின் பாதையில் உரசும் மட்டைகளை) வெட்டப்பட்டு மின் கம்பியை சரி செய்து மின் விநியோகம் வழங்கப்பட்டதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.6 மேல்முறையீட்டாளரின் 21.09.2022 நாளிட்ட புகார் மனுவிற்கு உரிய விளக்கத்தை உதவி செயற்பொறியாளர் /விநியோகம்/ கோவில்பட்டி அலுவலக கடிதம் மூலம் அன்னாரது இல்ல முகவரிக்கு அனுப்பப்பட்டு அக்கடிதத்தை பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக ஒப்புகை அட்டை பெறப்பட்டதாகவும், திரு.கணபதிவேல், Retd., DEO அவர்கள் நிலத்தின் மின் பாதையில் தென்னை மர மட்டைகள் உரசிக்கொண்டுள்ள புகைப்படம் இணைக்கப்பட்டுள்ளதாகவும் எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.7 மேற்கண்ட வாதங்களை ஆராயும்போது உரிமதாரர் மேல்முறையீட்டாளருக்கு மின் இணைப்பு வழங்கிய பொழுது மின்பாதை அமைத்த இடம் காலியாக இருந்தது தெரியவருகின்றது. அதாவது மின்பாதையானது ஏற்கனவே வளர்ந்த மரங்களுக்கு இடையே அமைக்கப்பட வில்லை. மேலும் மேல்முறையீட்டாளர் அனுப்பிய இணைப்பு ஆவணங்களில் அவருடைய கம்பி முள்வேலியிருந்து 5.6 அடி தள்ளி மின்பாதை அமைத்ததால் 4 ஆண்டுகள் கழித்து தென்னை மரங்கள் வளர்ந்து கிளைகள் நீண்டு வளர்வதால் அந்த வடக்கு வரிசையிலுள்ள 14 தென்னை மரங்கள் மின்கம்பிகளை காற்று வீசும் போது தொடுவதும் உரசுவதுமாக இருகின்றது என தெரிவித்துள்ளார்.

7.8 இதன் மூலம் மேல்முறையீட்டாளருக்கு மின்பாதை அமைக்கும் போது அவருடைய விவசாய நிலம் காலியாக இருந்ததும் அதன் பிறகே மரங்கள் நடப்பட்டதும் அது தற்பொழுது வளர்ந்த நிலையில் மின்பாதையை உரசுவதும் தெரியவருகின்றது. அக்காலகட்டத்தில் மின்பாதை அவருடைய நிலத்தில் அமைக்கும் போது மேல்முறையீட்டாளர் எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை என்பதை கேட்புரையின் போது உறுதி செய்யப்பட்டது. மேலும் மேல்முறையீட்டாளர் இணைத்த ஆவணங்களின் மூலம் 2017, 2018-இல் மின்தடை இல்லையெனவும் 2019-இல் 2

நாட்கள் 2020–இல் 1 நாள் மற்றும் 2021–இல் அடிக்கடி மின்தடை நடைபெற்றதாகவும், மரக்கிளைகளை வெட்டிய பிறகு மின்தடை இல்லை என்றும், ஜனவரி 2022 முதல் ஜுன் 2022 வரை மின்தடை இல்லை என்றும் அதன் பின்புதான் மின்தடை ஏற்பட்டது என்று கூறுவதன் மூலம் மேல்முறையீட்டாளருக்கு ஏற்படும் மின்தடை அவரது நிலத்தில் மின்பாதைக்கு அருகில் நடப்பட்டுள்ள தென்னை மரங்களின் மரக்கிளைகள் உரசுவதால் தான் ஏற்படுகின்றது என்பதை அறிய முடிகின்றது.

7.9 மேலும், மேல்முறையீட்டாளர் தன்னுடைய தோட்டத்திற்கு மின்தடை ஏற்பட்டாலும் தான் இல்லாத போது மின் அலுவலர்களை உள்ளே விட வேண்டாம் என்று தனது தோட்ட காவலருக்கு தெரிவித்த மேல்முறையீட்டாளரின் செயல் மின்தடை சரி செய்ய உரிமதாரர் ஆய்வு செய்ய அனுமதி மறுப்பதும் ஆனால் அதேசமயம் மின்தடை சரிசெய்யப்படவில்லை என்று தெரிவிப்பதும் முரணாக இருக்கின்றது.

7.10 மேலும் எதிர்மனுதாரர் மின்தடை மரக்கிளைகளால் ஏற்படுகின்றது என்றும் அதனை நிவர்த்தி செய்ய 18.09.2022 அன்று அவர் தோட்ட காவலர் மூலம் மேல்முறையீட்டாளருக்கு தெரிவித்த பின்பு அன்று அறுந்து கிடந்த மின்பாதை சரிசெய்ய மின்பாதை அருகில் சென்ற அவரது தோட்டத்தில் பணியாற்றும் பணியாளர் மூலம் மின்பாதைக்கு இடையூராக உள்ள தென்னை மட்டைகள் நீக்கிய பின்பே மின்விநியோகம் வழங்கப்பட்டது என்ற வாதுரையின் மூலமும் மேலும் ஐந்து ஆண்டுகளில் மேல்முறையீட்டாளர் 2017, 2018, 2019– 2 முறை, 2020–1 முறை, 2022 ஜனவரி – ஜுன் வரை மின்தடை இல்லை என்பதால் மின்தடை ஏற்பட்ட காலம் வாரிய தரப்பால் நிகழவில்லை என்பதை அறியமுடிகின்றது.

7.11 மேல்முறையீட்டாளருக்கு ஏற்பட்ட மின்தடைக்கு அவர் மின்பாதை அருகில் மரங்களை நட்டு வளர்ப்பதும், அந்த மரத்தின் கிளைகள் உரசுவதால்தான் மின் தடை ஏற்படுவதும் அதை எதிர்மனுதாரர் தொடர் நிகழ்வாக சரி செய்வதும் அறியமுடிகிறது. எனவே, இம்மின்தடைக்கு உரிமதாரரின் சேவை குறைபாடு என நிவாரணம் எழுப்பும் கோரிக்கை சரியான வாதமாக இல்லாததால் அந்த கோரிக்கை நிராகரிக்கப்படுகின்றது.

7.12 மேல்முறையீட்டாளரின் அடுத்த கோரிக்கையான மின்தடை காரணம் காட்டி எதிர்மனுதாரர் தன்னுடைய தோட்டத்தில் உள்ள தென்னை மரத்தின் 54 மட்டைகளை

18.9.2022 ஞாயிறு அன்று வெட்டப்பட்டதற்கு நிவாரணம் கோரியுள்ளார். 18.09.2022 ஞாயிறு தோட்டத்தினுள் தன் அனுமதியின்றியும் தனக்கு மின்துறை அலுவலர்கள் தெரிவிக்காமலும் உள்ளே சென்று தென்னை மரத்தின் மட்டைகளை வெட்டியுள்ளனர் என்றும், இதற்கு மின் தடையை காரணம் காட்டுவதாகவும், ஞாயிறு விடுமுறை நாள் எனவும், ஒரு நாளில் ஏற்பட்ட மின்தடையை அன்றே செய்ததில்லையெனவும், வெளியிலுள்ள மின்கம்பத்தில் ஏற்பட்ட மின்கம்பி அறுந்து கிடந்ததை மட்டும் சரிசெய்துவிட்டு சென்றிருக்கலாம் என மேல்முறையீட்டாளர் தெரிவித்துள்ளார்.

7.13 எதிர்மனுதாரர் மனுதாரரின் புகாரில் தெரிவித்துள்ளபடி மரங்களுக்கு சேதம் ஏற்படுத்தவில்லை எனவும், அறுந்த மின் கம்பிகளை மீண்டும் மின்கம்பத்தில் கட்டுவதற்கு தடையாக இருந்த தென்னை மட்டைகள் மட்டும் வெட்டப்பட்டதாகவும், அறுந்த மின் கம்பிகளை Binding செய்து சரி செய்யப்பட்ட புகைப்படம் இணைக்கப்பட்டுள்ளதாகவும், திரு.கணபதிவேல் அவர்களிடம் பலமுறை இது தொடர்பாக விளக்கம் அளித்ததாகவும் தெரிவித்துள்ளார். மேலும், மின் பாதைக்கு கீழ் எவ்வாறு தென்னை மரங்களை மின் நுகர்வோராகிய மேல்முறையீட்டாளர் வைத்துள்ளார் என்பது இணைக்கப்பட்ட புகைப்படங்களின் மூலம் தெளிவாகிறது என வாதிட்டார்.

7.14 மின் பாதைக்கு இடையூராக இருந்த தென்னை மர மட்டைகளின் பகுதியை அகற்றியதற்கு வாரியம் இழப்பீடு வழங்க வேண்டும் என்று தனது மேல் முறையீட்டு மனுவில் குறிப்பிட்டுள்ளது ஏற்புடையதல்ல என்றும், மாறாக மேல்முறையீட்டாளரின் செயலால் வாரிய மின் கட்டமைப்பிற்கு சேதம் ஏற்படுவதாகவும், இன்றைய நிலையிலும் தென்னை மர மட்டைகள் மின் கம்பிகளுடன் உரசிக் கொண்டுள்ளதால் அடிக்கடி மின் தடை ஏற்படுவதாக எதிர்மனுதாரர் தெரிவித்துள்ளார்.

7.15 இந்நிலையில் ஒரு மின் இணைப்பு வழங்க உரிமதாருக்கு நுகர்வோர் உட்பகுதி இடத்தில் மின்பாதை அமைக்க மற்றும் மின் இணைப்பு வழங்க உள்ள உரிமைகளை அறிய தமிழ்நாடு மின்பகிர்மான விதி 29(9)–ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

"*29. மின்னிணைப்புத் தொடர்கள்:*

*xxx*

*xxx*

*xxx*

*(9)*

*மின்சாரம் வழங்க தேவைப்படும் கம்பங்கள், மின் தொடர்கள், கட்டமைப்புகள் மின் வடங்கள், பிற சாதனங்கள் ஆகியவற்றை நிறுவுவதற்குத் தேவையான நுகர்வோருக்குச் சொந்தமாகவுள்ள எந்த நிலப்பகுதியையும் பயன்படுத்த உரிமதாரருக்கு நுகர்வோர் இசைவு தர வேண்டும் என்பதோடு எல்லா நேரங்களிலும் அப்பகுதியை அணுக பொறியாளருக்கும் அவருடன் வரும் அவரது முகவர்களுக்கும், பணியாளர்களுக்கும் அவருக்குக் கீழே பணிசெய்பவருக்கும். தொழிலாளர்களுக்கும் கருவியுடனோ இல்லாமலோ வந்து கம்பங்களிலோ, மின் தொடர்களிலோ, கட்டமைப்புகளிலோ, மின் வடங்களிலோ, பிற சாதனங்களிலோ ஆய்வு செய்யவும் பணி செய்யவும் விட வேண்டும் மேலும்அத்தகைய கம்பங்களிலோ, மின் செலுத்தத் தொடர்களிலோ, கட்டமைப்புகளிலோ, மின் வடங்களிலோ, பிற சாதனங்களிலோ நிறுவுதலோ அல்லது வேறு பணிகளோ செய்வதால் ஏற்படும், அவரது சொத்துக்கு உருவாகும் சேதங்களுக்கான வகைக் கணக்கில் கோரல் ஏதும் நுகர்வோர் வைக்கக் கூடாது."*

7.16 மேலே கூறிய விதிகளின்படி உரிமதாரர் நுகர்வோரின் 1) நிலத்தில் மின்கம்பம் மின்தொடர் அமைப்பதற்கு உரிமை உள்ளது 2) அந்த மின்கம்பம், மின் தொடரில் ஆய்வு செய்யவும் பணி செய்யவும் உரிமை உள்ளது 3) அத்தகைய கம்பங்களில் மின்சாரம் செலுத்த தொடர்களிலோ கட்டமைப்புகளிலோ, மின்வடங்களிலோ பிற சாதனங்களில் நிறுவுவதோ அல்லது வேறு பணிகளோ செய்வதால் ஏற்படும் அவரது சொத்துக்கு உருவாகும் சேதங்களுக்கான வணிகக் கணக்கில் கோரல் ஏதும் நுகர்வோர் வைக்கக்கூடாது என்பது தெரியவருகிறது.

7.17 மேலும் மேல்முறையீட்டாளர் தன்னுடைய முறையீட்டு மனுவில் தன்னுடைய தோட்ட காவலருக்கு மின்தடை இருப்பினும் உரிமதாரரின் ஊழியர்கள் தனக்கு தெரிவிக்காமல் பணி செய்ய அனுமதிக்கக் கூடாது என்ற மேல்முறையீட்டாளரின் கூற்று குறித்து தமிழ்நாடு மின் வழங்கல் விதி 25 (1)(a)–ஐ ஆராய விரும்புகிறேன். அவ்விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

*"25. உரிமதாரரின் பொருத்தமைப்புகளை அல்லது பிற கருவிகளை அகற்ற (நுகர்வோரின் உறைவிடத்துக்குள் உரிமமதாரர் நுழைவதற்கான அதிகாரம் (1) சட்டத்தின் 153 சட்டப்பிரிவு, (நுகர்வோரின்) இருப்பிடத்துக்குள் நுழைவதற்கான உரிமதாரரின் அதிகாரம், பற்றிப் பின்வருமாறு கூறுகிறது.*

*(1) தான் கருதிய உறைவோருக்குத் தெரிவித்த பிறகு போதுமான கால இடைவெளிக்குப்பின் உரிமதாரர்; அல்லது உரிமதாரரால் அதிகாரம் பெற்ற வேறொருவர் பின்வரும் நோக்கத்துக்காக அவரால் சட்டப்படி மின் வழங்கல் தொடர்களையோ, பணியமைப்புகளையோ நிறுவி மின்சாரம் தரப்படும், தரப்பட்டுள்ள இருப்பிடத்துக்கு*

*உள்ளோ அல்லது அத்தகைய அமைப்புகளுக்குக் கீழோ, மேலோ, நெடுகவோ, குறுக்கிலோ, உள்ளோ, புறத்தோ அமைந்துள்ள இருப்பிடத்துக்குள்ளோ, மனைக்குள்ளோ அங்கு உறைபவரிடம் வரும் நோக்கத்தின் தகவல் தெரிவித்து நுழையலாம்.*

*(a) ஆய்வு செய்யவும் சோதிக்கவும் பழுது பார்க்கவும் உரிமதாரருக்குச் சொந்தமான மின்சாரம் தரும் சாதனங்களையோ பணியமைப்புகளையோ பொருத்தமைப்புகளையோ மாற்றி அமைக்கவும், அல்லது*

*xxx"*

7.18 மேற்கூறிய விதிகளின் மூலம் உரிமதாரர், நுகர்வோருக்கு சொந்தமான நிலத்தில் பழுது பார்ப்பதற்கு உரிமை உள்ளதாக தெரியவருகிறது. ஆகவே, மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

7.19 மேலும், மின்தடையை ஏற்படுத்தும் மரக்கிளைகளை நீக்கி மின்பழுதை சரி செய்த உரிமதாரரின் செயலுக்கு நிவாரணம் கோரும் கோரிக்கையின் பொருட்டு உரிமதாரருக்கு மரக்கிளைகளை அகற்ற உரிமையுள்ளதா என அறிய மின்சார சட்டம், 2003–இன் 53 (g) மற்றும் 68 (1), (2)(a), (5)–ஐ ஆராய விரும்புகிறேன்.

***53. Provision relating to safety and electricity supply:***

*(g) specifying action to be taken in relation to any electric line or electrical plant, or any electrical appliance under the control of a consumer for the purpose of eliminating or reducing the risk of personal injury or damage to property or interference with its use.*

***68. Overhead lines***

*(1) An overhead line shall, with prior approval of the Approprite Government, be installed or kept installed above ground in accordance with the provisions of sub-section (2).*

*(2) The provisions contained in sub-section (1) shall not apply–*

*(a) in relation to an electric line which has a nominal voltage not exceeding 11 kilovolts and is used or intended to be used for supplying to a single consumer;*

*(5) Where any tree standing or lying near an overhead line or where any structure or other object which has been placed or has fallen near an overhead line subsequent to the placing of such line, interrupts or interferes with or is likely to interrupt or interfere with, the conveyance or transmission of electricity or the accessibility of any works, an executive Magistrate or authority specified by the Appropriate Government may, on the application of the licensee, cause the tree, structure or object to be removed or otherwise dealt with as he or it thinks fit."*

7.20 மேற்கூறிய மின்சார சட்டம் 68(5) 2003–இல் எந்த வகையான மரங்கள் மின்பாதைக்கு அருகில் இருந்தாலும் உரிமதாரர் உரிய செயல் நடவடிக்கையின் மூலம் அதனை அப்புறப்படுத்துவதற்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது. மின்சார சட்டம் 53(g) ன்படி பாதுகாப்பு நடவடிக்கை உறுதி செய்வதற்காக நுகர்வோரின் கட்டுப்பாட்டில்

இருந்தாலும் மின்பாதைக்கு சேதம் விளைவிக்கும் சாதனங்கள், பொருட்களின் மீது நடவடிக்கை எடுக்க அதிகாரம் உள்ளது என்று கூறப்பட்டுள்ளது. மின்சார சட்டம் 68(2)(a)–இன்படி ஒரு தனிநபருக்கு மின்சாரம் வழங்கும் நேர்வில் 11 KV–க்குள் இருக்கும்பட்சத்தில் அரசாங்கத்திடமிருந்து அனுமதி பெற வேண்டியது அவசியமில்லை என தெரியவருகிறது. மேலும், மேல்முறையீட்டாளரின் மின்இணைப்பு தாழ்வழுத்த மின்பாதையாகும். இது சம்பந்தமாக, தமிழ்நாடு மின்பகிர்மான விதி 29(9)இன் முக்கிய சரத்துகள் பார்வைக்காக கீழே கொடுக்கப்படுகிறது.

> *"மேலும் அத்தகைய கம்பங்களிலோ, மின் செலுத்தத் தொடர்களிலோ, கட்டமைப்புகளிலோ, மின் வடங்களிலோ, பிற சாதனங்களிலோ நிறுவுதலோ அல்லது வேறு பணிகளோ செய்வதால் ஏற்படும், அவரது சொத்துக்கு உருவாகும் சேதங்களுக்கான வகைக் கணக்கில் கோரல் ஏதும் நுகர்வோர் வைக்கக் கூடாது."*

7.21 மேற்கூறிய சட்டத்தில் மின்பாதைக்கு அருகிலுள்ள மரங்களை மின்தடை ஏற்படுத்திய / ஏற்படுத்தும் நிலையில் இருந்தால் மரங்களையே அகற்றலாம் என்ற நிலையில் மேல்முறையீட்டாளரின் பணியாளரிடம் தகவல் தெரிவித்து விட்டு மரத்தின் கிளைகளை மட்டுமே அகற்றிய செயல் உரிமதாரருக்கு மின்தடையை களைய பணி செய்ய அதிகாரமுள்ளது என்று உறுதி செய்யப்படுகிறது. மேலும் தமிழ்நாடு மின் பகிர்மான விதி 29(9)ன் படி அவரது சொத்துக்கு உருவாகும் சேதங்களுக்கான வகைக் கணக்கில் கோரல் ஏதும் நுகர்வோர் வைக்கக் கூடாது எனவும் அறிய முடிகிறது.

7.22 ஆகவே, மின்தடையை சீர்செய்யும் நிகழ்வில் மரக்கிளையை அகற்றிய எதிர்மனுதாரரின் செயல் சரி எனப்படுகிறது. மேலும், மேல்முறையீட்டாளர் தன்னுடைய ஆவணங்களில் மின்கம்பிகளில் உரசும் தென்னை மட்டைகளை மீண்டும் உரசாதவாறு நீக்கிய பின்பு மின்தடை மீண்டும் ஏற்படவில்லை என்ற மேல்முறையீட்டாளரின் வாதத்தின் மூலமே மரக்கிளையால் தான் மின்தடை ஏற்பட்டது என்பது தெரியவருவதால் அதனை நீக்கி மின்பாதையை மின்தடை ஏற்படாதவாறு சீரமைப்பு செய்யும்பொழுது வெட்டிய மரக்கிளைகளுக்கு நிவாரணம் கோரும் கோரிக்கை மேற்கூறிய விதிகளின் படி பொருந்தாது என்பதால் அக்கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

7.23 மேலும், மேல்முறையீட்டாளர் தன்னுடைய மும்முனை மின்னிணைப்பில் உரிமைதாரர் அலுவலர் மின்கம்பத்திலுள்ள பீஸ் கேரியரை நீக்கி தோட்ட பணியாளரிடம்

25-10-2022 அன்று கொடுத்து சென்றுவிட்டதாகவும் 25-10-2022 முதல் 15-12-2022 வரை மின்தடை சரிசெய்யவில்லை என்று முறையிட்டதாகவும், மேலும் மின்கம்பத்திலிருந்து மோட்டருக்கு செல்லும் வயர்கள் எரிந்ததற்கு நிவாரணம் வழங்க வேண்டும் என்றும் வாதிட்டார்.

7.24 எதிர்மனுதாரர் மின்நுகர்வோர் பராமரிப்பிலிலுள்ள மோட்டார், மின்சாதனங்கள் மற்றும் அதன் மின் கட்டமைப்பை பராமரிப்பது மின்நுகர்வோரின் கடைமையாகும் எனவும், மேல்முறையீட்டாளர் மீட்டர் பெட்டி cut out லிருந்து மோட்டாருடைய starter வரை வயர் எரிந்துள்ளதை தெரிவித்ததால் உரிமதாரரின் cut out வரை மின்சாரம் இருப்பதை உறுதி செய்த பின்பு பாதுகாப்பு நடவடிக்கையாக பீஸ் கேரியரை அகற்றி முறையீட்டாளரின் பணியாளரிடம் வழங்கியதாக தெரிவித்துள்ளார்.

7.25 மேல்முறையீட்டாளர் மீட்டர் cut outலிருந்து மோட்டாருடைய starterக்கு செல்லும் எரிந்த மின்வயரை பழுது நீக்கி தகவல் தெரிவித்ததன் அடிப்படையில் 20-10-2022 அன்று மின்இணைப்பு வழங்கப்பட்டு மின்னழுத்தம் சீராக இருந்தது மேல்முறையீட்டாளரிடம் தெரிவிக்கப்பட்டது என்றும் ஆகவே மின்கம்பத்திலிருந்து மோட்டர் அறையிலிருக்கும் மோட்டருக்கு செல்லும் வயர்கள் எறிந்ததற்கு நிவாரணம் வழங்கும் கோரிக்கையை நிராகரிக்க வேண்டும் என்றும் எதிர்மனுதாரர் வாதிட்டார்.

7.26 இந்நிலையில் மீட்டர் பெட்டி cut out லிருந்து மோட்டர் starter க்கு செல்லும் வயரை பராமரிப்பது யாரை சாறும் என்பது குறித்து தமிழ்நாடு மின்சார பகிர்மான விதி 30(1) ஐ ஆராய விரும்புகிறேன். அந்த விதி கீழே கொடுக்கப்பட்டுள்ளது

***"30. நுகர்வோர் நிறுவல் அமைப்புகள்:***

*1) நுகர்வோரின் நிறுவுகை, கம்பியடல் மற்றும் சாதனம் தொடர்பாக சட்டத்தின் 53 ஆம் பிரிவின் கீழ் அடங்கியுள்ள சட்டப்படியான வகைமுறைகளுக்கு இணங்கி நடப்பதற்கு ஏற்ப மாறாது ஒரே சீராக இருத்தல் வேண்டும். நுகர்வோரின் வளாகத்திலுள்ள சாதனங்களையும், கம்பியிடலையும் பராமரித்தல் அல்லது சோதனையிடல் பொறுத்த பொறுப்பு நுகர்வோரையேச் சார்ந்ததாகும்."*

7.27 மேற்கூறிய விதியின் படி மேல்முறையீட்டாளர் நிறுவிய அமைப்புகளில் ஏற்படும் பழுதை சரி செய்வது மேல்முறையீட்டாளரையே சாறும். எனவே, அதன் பொருட்டு நிவாரணம் வழங்க உரிமதாரரிடம் எழுப்பும் கோரிக்கை சரியாக இல்லாததால் மேல்முறையீட்டாளரின் கோரிக்கை நிராகரிக்கப்படுகிறது.

8.0 <u>முடிவுரை</u>:

8.1 மேற்கூறிய பத்திகளின் கண்டுபிடிப்புகளின் அடிப்படையில் இம்மேல்முறையீட்டு மனுவில் உள்ள மேல்முறையீட்டாளரின் கோரிக்கைகள் நிராகரிக்கப்படுகிறது.

8.2 மேற்கண்ட தீர்வுடன் இந்த மேல்முறையீட்டு மனு எண் 40/2023 முடிவுக்கு கொண்டு வரப்படுகிறது. செலவு தொகை இல்லை.

**(ந. கண்ணன்)**
மின்குறைதீர்ப்பாளர்

"நுகர்வோர் இல்லையேல் நிறுவனம் இல்லை"
**“No Consumer, No Utility”**

<u>பெறுநர்</u>
1. திரு. பி. கணபதிவேல், – By RPAD
எண். 45–10B, பாரதிநகர், 1வது தெரு,
கோவில்பட்டி – 628 501,
தூத்துக்குடி மாவட்டம்.

2. செயற்பொறியாளர் / விநியோகம்/கோவில்பட்டி,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
TNEB வளாகம், இளையரசநெண்டல் ரோடு,
கோவில்பட்டி – 628 501.

3. உதவி செயற்பொறியாளர் / விநியோகம்/ஊரகம்/கோவில்பட்டி,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
TNEB வளாகம், இளையரசநெண்டல் ரோடு,
கோவில்பட்டி – 628 501.

4. உதவி மின்பொறியாளர் / விநியோகம்/நாலாட்டின்புதூர்,
தூத்துக்குடி மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
195, 2, பிள்ளையார் கோவில் தெரு,
நாலாட்டின்புதூர் – 628 716.

5. மேற்பார்வை பொறியாளர், – By email
**தூத்துக்குடி** மின் பகிர்மான வட்டம்,
தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம்,
எண். 131, 132, எட்டபுரம் ரோடு, தூத்துக்குடி – 628 001.

6. தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், – By email
தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகம்,
நடிப்பிசைப் புலவர் கே.ஆர். ராமசாமி மாளிகை,
144, அண்ணாசாலை, சென்னை – 600 002.

7. செயலாளர், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம், – By email
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.

8. உதவி இயக்குநர் (கணினி) – தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் இணையதளத்தில் வெளியிடுவதற்காக
தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்,
4வது தளம், சிட்கோ தலைமை நிர்வாக அலுவலக கட்டிடம்,
திரு.வி.க. தொழிற்பேட்டை, கிண்டி, சென்னை – 600 032.